RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1825

OPEN ACCESS

# இந்திரர் தேச சரித்திரம் எனும் வரலாற்று நூலும் அயோத்திதாசரியக் கோட்பாடும்

**L.P. மேரி விர்ஜினி ஷர்மிளா [அ, *], கே. வருசக்கனி [ஆ]**

[அ] பிரெஞ்சு துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா.

[ஆ] நாட்டுப்புறவியல் மற்றும் பண்பாட்டு ஆய்வுகள் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா.

# History of Indra Desam and Ayodhitasariya's Principles

**L.P. Marie Virginie Sharmila [a,*], K. Varusakkani [b]**

[a] Department of French, Madurai Kamaraj University, Madurai – 625021, Tamilnadu, India

[b] Department of Folklore and Culture Studies, School of Performing Arts, Madurai Kamaraj University, Madurai– 625021, Tamil Nadu, India

* Corresponding Author: kvkani2016@gmail.com

Received: 03-08-2022
Revised: 26-10-2022
Accepted: 03-11-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

Ayodhitasar is a Tamil pandit and a social thinker. He was well recognized in various fields like sociology, politics, religion, culture, medicine, and journalism. All his principles are called Ayodhitasariyam. He created an alternative history book called "Indra Desa Sarithiram". The text focuses on Buddhism and the oppressed people rather than giving importance to Brahmins and Hinduism. The first subaltern history book written in Tamil from the position of the oppressed people is "Indra Desa Sarithiram". Through the Ayodhitasariyan's principles the traditional myths and histories are re-read, re-interpretations of the historical narratives of marginal people and original meanings are explored. The article discusses about the re-reading of the linguistic studies and about Ayodhitasariyam's principles.

**Keywords:** Ayodhitasariya's, History, Indra Desam, Sociology, Politics, Religion, Culture, Medicine, Journalism

## முன்னுரை

வாசித்தலை முதல் வாசிப்பு (First reading) எனவும் இரண்டாம் வாசிப்பு (Second reading) எனவும் பிரிக்கலாம். முதல் வாசிப்பில் ஒரு அனுபவமும் அர்த்தமும் இரண்டாம் வாசிப்பில் இன்னொரு வகையான அர்த்தமும் அனுபவமும் பெறப்படுகின்றது. முதல் வாசிப்பில் பிரதி தருகின்ற பொருளுக்கு மட்டுமே நாம் முக்கியத்துவம் கொடுக்கின்றோம் என என்று வாசக அனுபவக் கோட்பாடு (Reader Response Theory) சொல்கின்றது. இரண்டாம் வாசிப்பும் அதைத் தொடர்ந்து நடைபெறும் மறுவாசிப்பும் (Rereading) மிக ஆழமானது, பிரதியை மதிப்பீடு செய்வது, பிரதியின் மூல அர்த்தத்தை கண்டறிவது என சொல்லப்படுகின்றது. மறுவாசிப்புக் குறித்து கூறும்போது படைப்பாளன் (Author) ஒன்றைக் கட்டமைக்கின்றான். வாசகன் அதை மறுகட்டமைப்புச் செய்கின்றான் எனக் கூறப்படுகின்றது (Gnanasekaran, 2006). "எந்த ஒரு பனுவலும் மிகச்சிறிய அர்த்த துணுக்குகளின் ஒழுங்கமைப்பே எனவும் பிரதியானது தொடர்ச்சியான சிறுசிறு அர்த்தங்களால் உருவாக்கப்பட்டது என குறியியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர் (Dharmaraj, 2016). இதன்பின்னர்

ரோலன்பார்த் என்பவர் ஆசிரியர், பிரதி மட்டுமல்லாது வாசகனும் முக்கியமானவன் என்ற ஒரு கருத்தை முன்வைத்ததோடு, ஆசிரியர் இறந்து விட்டார் அறிவித்ததன் மூலம் பிரதியை முழுவதும் வாசகனுடையது என்பதாக ஆக்கினார் (Roland Barthes, 1981). வாசகன் தான் பிரதிக்கு முக்கியமானவன், அவன் பண்பாட்டு அரசியல், சமூக பின்புலம் சார்ந்தே தனது வாசித்தலை மேற்கொள்கின்றான் என்ற கருத்து பின் நவீனத்துவத்தில் வலியுறுத்தப்பட்டு "வாசகனின் வாசிப்பு அனுபவம்" ஒரு கோட்பாடாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பின் நவீனத்துவம் வாசகனை மையப்படுத்தி அவனுக்கு எதனையும் மறுவாசிப்பிற்கு உள்ளாக்கும் எல்லையில்லா அதிகாரத்தைப் பெற்றுத்தந்து விடுகிறது. இத்தகைய அதிகாரம் பெற்ற வாசகன் எதையும் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பது, அதிகார மையத்தைக் கேள்விக்குள்ளாக்குவது, திரும்பத் திரும்ப உடைப்பது, கலைத்துப் போடுவது, பிரதியை மறு வாசிப்பு செய்வது, புனிதங்களைக் கேள்விக்குள்ளாக்குவது என்று தனது வாசிப்பைத் தொடங்குகின்றான் (Dharmaraj, 2019). இப்படியான மறுவாசிப்பு முறைகள் பிரதியில் உள்ள முரண்களை அம்பலப்படுத்துகின்றது.

இப்படியான மறுவாசிப்புக் கோட்பாடுகள், பின்நவீனத்துவம் போன்றவை தமிழ்ச்சூழலில் அறிமுகமாகாத காலத்திலிலேயே மறுவாசிப்பு (Rereading), கட்டுடைத்தல் (Deconstruction), மீட்டுருவாக்கல் (Reconstruction) போன்ற கோட்பாடுகளை முதன்முதலில் தமிழ்ச் சிந்தனை மரபில் பயன்படுத்திய சிந்தனையாளர் அயோத்திதாச பண்டிதர் ஆவர். இந்த கோட்பாடுகளை பயன்படுத்தி அவர் படைத்த வரலாற்று ஆய்வு நூல் “இந்திரர் தேச சரித்திரம்” ஆகும். அயோத்திதாசரின் இந்த மறுகட்டமைப்புக் கோட்பாடு “அயோத்திதாசரியம்” என அழைக்கப்படுகின்றது. அயோத்திதாசரியம் என்ற கோட்பாட்டுச் சிந்தனைமுறையை ‘இந்திரர் தேச சரித்திரம்” என்ற வரலாற்று நூலை முன்வைத்து விவாதிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வரலாற்றுப் பிரதிகளை மறுவாசிப்பு செய்வதன் அவசியம்

இந்தியாவின் வரலாற்றை எழுதும் போது பெரும்பாலான வரலாற்று ஆய்வாளர்கள் வேதகால வரலாற்றிலிருந்தே இந்திய வரலாற்றை எழுத தொடங்குகின்றனர். வெளிநாட்டு வரலாற்று ஆய்வாளர்களும் இந்த “வேதகாலம்” என்ற வகைமாதிரியை மையமாக கொண்டே இந்திய வரலாற்றை புரிந்து கொள்ளுகின்றனர். அதையே இந்திய வரலாறாக கட்டமைக்கின்றனர். இதற்கான வரலாற்று ஆவணங்களாக புராணங்களையும் உபநிடதங்களையும் மேற்கோள் காட்டுகின்றனர். வேதகாலம், புராணங்கள், இதிகாசங்கள் என இவை அனைத்தும் அதிகார வர்க்கத்தின் கருத்தாக்கத்தையே பிரதிபலிக்கின்றன. இந்த நூல்களில் அதிகார வர்க்கத்திற்கு ஆதரவான நடைமுறைகள், விதிகள் உருவாக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு சுரண்டப்பட்டனர். இதனை நியாயப்படுத்துவதற்காக அரசு, மதம், புராணம், வரலாறு போன்றவற்றை அதிகார வர்க்கம் உருவாக்கி பாதுகாத்து வருகிறது (Prem, 2019). இந்த அமைப்பை ஏற்றுக்கொண்ட மக்களின் உளவியலானது இந்த ஒடுக்குமுறைகளுக்கு கட்டுப்பட்ட வாழ்வை ஏற்றுக்கொள்கிறது.

தம்மை ஒடுக்கும் மதத்தை ஏற்று தம்மை இழிவுபடுத்தும் புராணங்களை நம்பி வாழும் மக்கள் விடுதலை பெற, தம்மை ஒடுக்கும் கற்பிதங்களை உடைத்து வெளியேறி தாம் சுயமரியாதையுடன் வாழ்வதற்கான புதிய வரலாற்றை, அரசியலை, சமூக நெறிகளை உருவாக்குவது அவசியமாகிறது. மரபான வரலாற்று பிரதிகள் காட்டும் ஒற்றைத்தன்மையான வரலாற்றிலிருந்து விடுபட பன்மைத்துவம் கொண்ட “மாற்று வரலாறுகள்” நமக்கு அவசியமாகின்றன. பன்மைத்துவம் நிறைந்த நம் நாட்டில் ஒற்றைத்தன்மையான அதிகாரம் என்பது எப்படி இல்லையோ அதே போல ஒற்றைத்தன்மையான வரலாறு என்பதும் இல்லை. வரலாறு என்பது நேரான தொடர்ச்சியான நிகழ்வு என்றும் அதில் காலவரிசைப்படி உண்மைகளும் தகவல்களும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்ற கருத்தியலை ஃபூக்கோ மறுத்தார். “வரலாறு என்று ஒற்றையாக எதுவும் இல்லை. வரலாறுகள் என்று பன்மைப்படுத்தப்பட்ட பல வரலாறுகள்

இருக்கின்றன. முறைமைப்படுத்தப்பட்டவர்களுக்கும், விலக்கி வைக்கப்பட்டவர்களுக்குமான இடையில் நிகழ்ந்த நிகழ்வுகளே வரலாறுகள்" என்கின்றார் பூக்கோ (Foucault, 1979).

## பண்டிதர் அயோத்திதாசர்

பண்டிதர் அயோத்திதாசர் 1845 ஆம் ஆண்டு மே 20ஆம் நாள் பிறந்தார். சித்த மருத்துவப் பாரம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்ததால் ஓலைச்சுவடிகள் வாசிப்பில் அயோத்திதாசருக்கு பரிச்சயம் இருந்தது (Dharmaraj, 2019). பாலி, சமஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளை நன்கு அறிந்திருந்தார். சித்த மருத்துவர், அரசியலாளர், பத்திரிக்கையாளர், சமூக சிந்தனையாளர், பண்பாட்டு ஆய்வாளர், மொழியியல் அறிஞர், பவுத்த மறுமலர்ச்சியாளர் என பல்வேறு துறைகளில் புலமை பெற்று விளங்கினார். அயோத்திதாசர் உருவாக்கிய திராவிடக் கொள்கையானது அயோத்திதாசருக்கு பின் வந்த சமூக சிந்தனையாளர் தந்தை பெரியார் (EVR) அவர்களுக்கு அடிப்படையாக இருந்தது (Aloysius, 2022).

மனு ஸ்மிருதியும் அர்த்தசாஸ்திரமும் பகவத் கீதையும் ராமாயண - மகாபாரத கதைகளும் சூத்திர, பஞ்சம மக்களின் மீதான அடக்குமுறைகளை, சுரண்டலை தர்மம் என்று நியாயப்படுகின்றன (Marudanayagam, 2006). ஆதிக்க வர்க்கத்தின் வரலாறு என்பது வெறும் கட்டுக்கதைகள் தான். இவற்றை கட்டுடைத்து உண்மையான வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தை அயோத்திதாசர் வலியுறுத்தினார். இலக்கிய ஆதாரங்கள் மட்டுமின்றி வாய்மொழி மரபையும் ஆவணங்களாக கொண்டு இந்து மத புராணங்கள் மீது கட்டுடைப்பை நிகழ்த்தியது மட்டுமின்றி அதற்கு மாற்றாக பவுத்தத்தை அடிப்படையாகக் கொண்ட பவுத்த வரலாற்றுக் கட்டமைப்பையும் அயோத்திதாசர் உருவாக்கினார்.

## இந்திர தேச சரித்திரம் -அறிமுகம்

அயோத்திதாசர் எழுதிய இந்திர தேச சரித்திரத்தின் சுருக்கம் பின்வருமாறு, "ஐம்புலன்களையும் அடக்கிய ஐந்திரனாகிய புத்தரின் பெயராகிய இந்திரரின் பெயரால் வழங்கப்பட்ட இந்திர தேசத்தில் மகட பாஷை, சகட பாஷை, திராவிட பாஷைகளை வரிவடிவமாக அறிஞர்களுக்கு கற்றுக்கொடுத்து நான்கு வேதங்களாகிய திரிசீலம், பஞ்ச சீலம், அஷ்ட சீலம், தச சீலமாகிய ஒழுக்கங்களோடு புத்த தன்மத்தை பரவ செய்து மக்கள் வாழ்ந்து வந்தனர். மொழியை ஒழுங்குபடுத்திய பின் பல்வேறு அறிவுகள் உற்பத்தியாகின. நிலம் பற்றிய அறிவு ஐந்திணைகளானது. தொழில்கள் பற்றிய அறிவு நான்கு பிரிவுகளானது. ஒழுக்கத்தையும் அறத்தையும் போதிக்கும் அரசுகள் உருவாகின. மூன்று பெரிய மொழிக்குடும்பங்களுக்குள் வட்டாரம் சார்ந்த வேறுபாடுகள் வளர வளர மொழி மேலும் மேலும் செழுமையானது. ஒரு சொல் பல பொருள், ஒரு பொருள் பல சொல் என்பதாக விளக்கப்பட்டது. இதன் தொகுப்பாக "நிகண்டு" என்ற தொகுப்பு வடிவம் பயன்பாட்டிற்கு வந்தது. பவுத்த தன்மத்தை விளக்க காலத்திற்கேற்றவாறு அறுவகை சமயங்கள் தோன்றின. பவுத்த பள்ளிகள் தோன்றி கல்வி கற்பிக்கப்பட்டது. புத்தரின் வழியில் பவுத்த சீலத்தை அடிப்படையாக கொண்ட ஒரு சமூக அமைப்பும், அதனுள் வழங்கப்பட்ட மொழிகளும், அதனால் உருவான அறிவுத்துறைகளும் இந்திர தேசமாக உருவெடுத்து 1700 ஆண்டுகளாகின.

புருசீக நாட்டிலிருந்து வந்த புருசீகர்கள் இந்திர தேசத்தை வந்தடைகின்றனர். இந்திர தேசத்தில் பவுத்த குருமார்களாகிய பிராமணர்களுக்கு கிடைக்கும் மரியாதைகளையும் அவர்களுக்கு பிச்சையாக கிடைக்கும் உணவுகளையும் கண்டனர். உடல் உழைப்பில் பழக்கமற்ற சோம்பேறிகளான புருசீகர்கள் இதை பார்த்து தாங்களும் பவுத்த குருமார்களாகிய பிராமணர்கள் தான் என வேசம் போட தொடங்கினர். சமண முனிவர்கள் போல புருசீகர்கள் முப்புரி நூலை அணிந்து கொண்டு தங்களையும் பிராமணர்கள் என கூறிக்கொண்டனர். இவ்வாறு வேச பிராமணர்கள் தங்களது வேச வாழ்க்கையை தொடர சில தந்திரங்கள் மூலம் மக்களிடையே

நிரந்தரமான வேறுபாடுகளை உண்டு செய்தனர். இந்திர தேசத்தில் ஒருவன் எந்த மொழியில் தனது காரியங்களை சாதிக்கிறானோ அது சாதி எனப்பட்டது. மேலும் பல்வேறு நிறமுடைய மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆகவே ஒருவரை என்ன வண்ணம் என விசாரிப்பர். பின்பு தொழில் குறித்து விசாரிப்பர். ஆனால் வேச பிராமணர்கள் சாதி, வண்ணம், தொழில் ஆகியவற்றை பிறப்பின் அடிப்படையில் மாற்றியமைத்து பிரிவினையை தொடங்கி வைத்தனர். மொழிகளின் அர்த்தங்களை குழப்பி பண்பாட்டு சீரழிவை தொடங்கி வைத்தனர்.

வேச பிராமணர்களின் இத்தகைய சூழ்ச்சியை அறிந்த பவுத்த குருமார்கள் மக்களிடையே வேஷ பிராமணர்களின் சூழ்ச்சியை பறைந்து வந்தார்கள் (பறைதல் - கூறுதல்). ஆகவே, பவுத்த குருமார்களை கண்ட வேச பிராமணர்கள் அவர்கள் நம்மை பற்றி மக்களிடையே பறைய போகிறார்கள், பறைய வருகிறார்கள் என கூறி பயந்து வந்தனர். பறைதல் எனும் வினைப்பெயரை சாதிப்பெயராக்கி பறையர் வருகிறார்கள், பறையர் போகிறார்கள் என இழிவான அர்த்தம் கற்பித்து ஊருக்கு வெளியே விரட்டி விட்டனர்.” இவ்வாறு இந்திர தேச சரித்திரம் முடிவடைகின்றது.

அயோத்திதாச பண்டிதர் இந்திரர் தேச சரித்திரத்தில் தாம் எழுதப்போகும் விஷயங்கள் குறித்தும் எழுதுவதற்கான நோக்கம் குறித்தும் தெளிவாக முன்மொழிகின்றார். “அந்தந்த சரித்திரக்காரர்கள் காலவரசர்களையும், அவரவர்கள் ஆண்டு வந்த தேசங்களையும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நாம் அவைகள் யாவற்றையும் விடுத்து இத்தேசத்துள் நிறைந்திருந்த வித்தை, புத்தி, யீகை, சன்மார்க்கங் குறைந்து சாதிபேத மதபேதத்தால் வஞ்சினம் பொறாமெ நிறைந்து நாளுக்குநாள் தேசம் பாழடைந்து வருவதற்குக் காரணமாய சரித்திரம் யேதுண்டோ அவைகளை மட்டிலு மிவ்விடம் வரைந்துள்ளோம். வித்தை, புத்தி, யீகை, சன்மார்க்கம் நிறைந்த மேன் மக்கள் கீழ்மக்களாகத் தாழ்ந்த குறைவே இந்திரர் தேசத்தின் சிறப்புங் குன்றி சீர்கெடுவதற் கேதுவாகிவிட்டது. யதார்த்தத்தில் தேசத்தையும் தேசமக்களையும் சீர்திருத்த முயலுங் கருணைதங்கிய பெரியோர்கள் இச்சரித்திரத் தையும் ஆய்ந்து சீர்திருத்தும்படி வேண்டுகிறோம்” (Iyotheethasar, 1999a).

## அயோத்திதாசரின் ஆய்வு முறையியல்

இந்திரர் தேச சரித்திரம் எனும் மாற்று வரலாற்றை கட்டமைக்க அயோத்திதாசர் கீழ்கண்ட வழிமுறைகளை உள்ளடக்கிய ஆய்வுமுறையியலை வடிவமைத்தார். அவைகளாவன,

1. பிரதிகளை மறு வாசிப்பு செய்தல் (Rereading)
2. சொற்களுக்கான மூல அர்த்தங்களைக் கண்டறிதல்
3. இலக்கியப் பிரதிகளைக் கட்டுடைத்து மாற்று விளக்கங்களை கூறுதல் (Deconstruction)
4. வரலாற்றைத் திரும்ப எழுதுதல் (Rewriting)

## பிரதிகளை மறுவாசிப்பு செய்தல்: (Rereading)

அயோத்திதாசர் இலக்கியம், வரலாறு, சமயம், அரசியல், சாதியம் என பல்வேறு விஷயங்களையும் மறுவாசிப்பிற்கு உட்படுத்தினார். ஏற்கனவே வழக்கத்தில் இருக்கும் வரலாற்று நிகழ்வுகளையும், புராண இதிகாசங்களையும் இலக்கியங்களையும் புதிய நோக்கில் மறுவாசிப்பு செய்தார் (Dharmaraj, 2019). இந்த மறுவாசிப்பின் வழியாக பிரதிகளில் இருக்கும் சொற்களின் வரலாற்றையும் அந்த சொற்கள் வெளிப்படுத்தும் அர்த்தங்களையும் குறித்து விவாதிக்கத் தொடங்கினார். பிரதிகளில் வெளிப்படுத்தப்படும் நிகழ்வுகளை விமர்சனம் செய்வதன் மூலம் ஏற்கனவே சொல்லப்பட்ட விளக்கங்களுக்கு பின் ஒளிந்திருக்கும் முரண்களை வெளிக்காட்டினார்.

அயோத்திதாசரின் மறுவாசிப்பு முறையை ஃபூக்கோவின் தொல்லியல் கோட்பாட்டோடு பொருத்திப்பார்க்கலாம் (Foucault, 1966). ஒரு தொல்லியலாளன் அகழாய்வில் துண்டு துண்டுகளாக சிதறிக் கிடைக்கும் பொருட்களை சுத்தம் செய்து அவற்றை ஆய்வுச்சாலையில் வைத்து

மறுநிர்மாணம் செய்வதை போல அயோத்திதாசர் பிரதிகளில் உள்ள சொற்களை துண்டு துண்டுகளாக பகுத்து (Deconstruction) பின்பு மீண்டும் பிரதியாக மறுநிர்மாணம் (Reconstruction) செய்கின்றார். இவ்வாறு செய்வதன் மூலம் பிரதிக்குள் மறைந்துள்ள முரண்களையும் காரணகாரியங்களையும் அறிய முடிகின்றது. சமூக வரலாற்றை எழுத அயோத்திதாசர் பயன்படுத்திய முறையியல்களாக மொழியிலிருந்து வரலாற்று தரவுகளை வருவித்தல், புனைவுகளை கட்டுடைத்தல் ஆகியவற்றை கூறலாம். எழுத்து பிரதிகளில் இலக்கணம் மட்டுமே உள்ளது. இலக்கணத்தால் அர்த்தத்தை தர இயலாது. பிரதியை வாசிக்கும்போதே அர்த்தம் உற்பத்தியாகின்றது. இந்த அர்த்த உற்பத்தியை இலட்சணம் என அயோத்திதாசர் அழைக்கின்றார் (Dharmaraj, 2019).

பிரதிகளில் இருந்து சொற்களை தனியாக பிரித்த அயோத்திதாசர் அந்த சொற்களின் மெய்யான அர்த்தங்களை விளக்குகின்றார். பின் அந்த மெய்யான அர்த்தங்கள் யாரால், எப்படி, என்ன காரணத்திற்காக திரிக்கப்பட்டு இன்றைய தவறான அர்த்தங்கள் நடைமுறைக்கு வந்தன என்பதை விளக்குகின்றார்.

## பிரதிகளைக் கட்டுடைத்தல்

பிரதிகளை மறுவாசிப்புக்கு உட்படுத்துவதன் மூலமாக அதிலுள்ள சொற்களின் மூல அர்த்தத்தை கண்டறிகிறார். பின்பு அந்தச் சொற்களுக்கு மரபாக சொல்லப்பட்டு வரும் விளக்கங்களை முற்றிலும் மறுத்து அந்த விளக்கங்களுக்கு தலைகீழாக மாற்று விளக்கங்களை கூறுகின்றார் (Dharmaraj, 2019). அதற்கு ஆதாரமாக பழந்தமிழ் இலக்கியங்கள், இலக்கண நூல்கள், பாலி - சமஸ்கிருத - தமிழ் மொழி சார்ந்த மொழியியல் ஆய்வுகள், நிகண்டுகள் என பல்வேறு ஆதாரங்களை தருகின்றார். உதாரணமாக "சிந்து நதி" என்ற வார்த்தையிலிருந்து "இந்தியா" என்ற பெயர் வந்தது என்ற மரபான பிரதிகளின் கருத்துகளுக்கு மாற்றாக "ஐந்திரன்" என்ற புத்தரின் 1008 பெயர்களில் ஒன்றான "இந்திரன்" என்ற பெயரிலிருந்தே "இந்தியா" என்ற சொல் வந்தது என தன்னுடைய மொழி ஆய்வுகளின் மூலம் நிறுவுகின்றார் (Iyotheethasar, 1999b). பல்வேறு புராணங்களையும் கட்டுடைத்து மாற்று விளக்கங்களை அயோத்திதாசர் தருகின்றார். கார்த்திகை தீபம் எனும் புராணக்கதையை கார்த்துல தீபம் என்கின்றார். இருளை (கார்) விலக்கும்(துல) தீபம் என அர்த்தப்படுத்துகின்றார். உடல் சுத்தம், வாக்கு சுத்தம், மன சுத்தம் என பவுத்தம் போதித்த திரிகாய மந்திரத்தினை வேச பிராமணர்கள் காயத்திரி மந்திரமாக மாற்றிவிட்டனர். இவ்வாறு பவுத்த தன்மம் தொடர்பான அனைத்து வார்த்தைகளையும் வேச பிராமணர்கள் அர்த்தத்தை மாற்றி திரித்து வழங்கி வந்தனர். அயோத்திதாசர் இந்த சொற்களை கட்டுடைத்து பவுத்த தன்மத்தோடு கூடிய புதிய விளக்கத்தை அளித்தார்.

பண்பாட்டின் பல்வேறு கூறுகளையும் விசாரணைக்கு உட்படுத்தும் அயோத்திதாசர் பண்பாட்டில் புழங்கும் சொற்களுக்கு மாற்று விளக்கங்களை தருவதன் மூலம் அந்த பண்பாட்டு நிகழ்வுகளுக்கும் சேர்த்தே மாற்று அர்த்தங்களை தருகிறார். இவ்வாறு மறுவாசிப்பின் மூலம் பிரதிகளில் உள்ள சொற்களின் மூலத்தையும் (origin), சொற்களின் அர்த்தங்களை கட்டுடைத்து புதிய விளக்கங்களை கொடுப்பதன் மூலம் பிரதிகளின் அர்த்தத்தை மாற்றுகின்றார்

## திரும்ப எழுதுதல் (Rewriting)

ஏற்கனவே எழுதப்பட்ட கட்டுரையில் உள்ள சொற்களுக்கான அர்த்தங்களை கட்டுரையிலிருந்து உதிர்த்து எடுத்து பின்பு திரும்ப இணைத்து பார்த்தல் என்பது "திரும்ப எழுதுதல்" எனப்படும் (Dharmaraj, 2019). வரலாறு குறித்த திரும்ப எழுதுதல் முறையானது வரலாற்றின் பல்வேறு முரண்களை விளக்குவதற்கு துணைபுரிகிறது. இந்திய தேசம் முழுவதும் பவுத்தம் வீழ்ந்த வரலாற்றையும், பவுத்தத்தோடு வீழ்ந்த மக்களின் வரலாற்றையும், வீழ்ச்சிக்கு முன்பான நிலைமைகளையும், வீழ்ச்சிக்கான காரணங்களையும், வீழ்ச்சிக்கு பின்பு நடந்த சமூக

பண்பாட்டு மாற்றங்களையும் விளக்குவதற்காக அயோத்திதாசர் “இந்திரர் தேச சரித்திரம்” எனும் மாற்று வரலாற்றை திரும்ப எழுதுகிறார். எந்த இலக்கிய பிரதிகள், புராணங்கள், இதிகாசங்கள் வழியே ஒடுக்கப்பட்ட மக்கள் மீது அடிமைத்தனம் திணிக்கப்பட்டதோ அதே புராண, இதிகாச, இலக்கியங்களை மறு வாசிப்பின் மூலம் கட்டுடைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் கண்ணியமான வரலாற்றை அயோத்திதாசர் திரும்ப எழுதினார். மரபான வரலாறுகள் கட்டமைக்கும் பார்ப்பனர் - பறையர் சாதிகளின் படிநிலையை தலைகீழாக்கம் செய்கின்றார். இந்திரர் தேச சரித்திரத்தில் பறையர் என்ற சொல்லை பவுத்தர்களை குறிப்பதற்காக பயன்படுத்துகின்றார். வேஷபிராமணர்களின் பொய்களை பறைகின்றவர்கள் (பறைதல் - கூறுதல்) என்பதால் பறையர் என்ற பெயர் வந்தது என அயோத்திதாசர் விளக்குகின்றார் (Iyotheethasar, 1999c). சாதியின் தோற்றுவாய் தீட்டு - புனிதம் என கட்டமைத்த மரபான வரலாற்றுக்கு மாற்றாக சாதியின் தோற்றுவாயை பொய் - உண்மை என்ற இருமைகளில் நிறுத்தினார்.

பிராமணர்கள் அறிவாளிகள் என்ற பிம்பத்தை உடைத்து பிராமணர்களை முட்டாள்கள் என்றார். வேதம், கல்வி ஓதுபவன் பிராமணன் என்ற கருத்தை உடைத்து தமிழ் பாரம்பரியத்தில் வேதத்தையும் கல்வியையும் பவுத்த குருமார்களான பாணர்கள், கணியர்கள், புலவர்கள் தான் வைத்திருந்தனர் (Iyotheethasar, 1999). எனவே அவர்கள் தான் உண்மையான பிராமணர்கள் (Real Brahmins), இன்றுள்ள பிராமணர்கள் பவுத்த குருமார்களை போல வேசமிட்ட” வேஷ பிராமணர்கள்” (Dummy Brahmins) என அயோத்திதாசர் கூறுகின்றார் (Iyotheethasar, 1999).

பிராமணர்கள் தங்களுக்கு சாதகமான புராணங்கள், கதைகள் மூலமாக தங்களை அறிவாளியாகவும், கடவுளாகவும், கல்வி அறிவுள்ளவனாகவும் தான் மட்டுமே பிராமணன் எனவும் காட்டியிருந்த பிம்பத்தை அதே போன்ற புராணங்கள், கதைகளின் வழியாகவே அயோத்திதாசர் பிராமணர்களுக்கு திரும்பச் செய்து அவர்களை பிராமணர்களே இல்லை என நிறுவினார்.

மரபான வரலாற்றுப் பிரதிகளில் காணப்படும் கலைச்சொற்களை முதலில் அடையாளம் காண்பது, பின்பு அச்சொற்களுக்கான அர்த்தங்களை விளக்குவது, அந்த விளக்கங்கள் எப்பொழுது, யாரால், எதற்காக உருவாக்கப்பட்டது என்ற காரணத்தை விவரித்தல், இச்சொற்களின் முறையான அர்த்தங்களை திரிக்கிற, சிதைக்கிற வேலைகள் நடைபெற்ற சூழலை விளக்குதல் என்பதாக அயோத்திதாசரின் ஆய்வு முறையியல் அமைகிறது.

## முடிவுரை

மரபான வரலாறுகளில் இடம்பெறாத மக்கள் தங்களுக்கான வரலாறுகளை மீட்டுருவாக்கம் செய்யவும், மரபான இலக்கிய பிரதிகளை மறுவாசிப்பு செய்யவும் பிரதிகளை கட்டுடைத்து மூல அர்த்தத்தை கண்டறியவும் வரலாற்றை மறுகட்டமைப்பு செய்யவும் அயோத்திதாசரியம் என்ற கோட்பாடு பயன்படுகின்றது. இந்திய போன்ற பன்மை கலாச்சாரப் பண்பாடுகளை கொண்ட நாட்டில் மரபான ஒற்றை கலாச்சார வரலாற்றுக்கு மாறாக பன்மை கலாச்சாரப் பண்பாடுகளை கொண்ட மாற்று வரலாறுகள் எல்லா சமூகங்களில் இருந்தும் எழுதப்படுவது அவசியமாகும். அந்த மாற்று வரலாறுகளை எழுதும் கருவியாக அயோத்திதாசரியம் விளங்குகின்றது. இவ்வாறான கட்டுடைக்கும் உளவியலும் வரலாற்று மீட்டுருவாக்க உளவியலும் தான் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான உளவியல் ஆகும். இந்த விடுதலைக்கான உளவியலை மக்கள் மனதில் உருவாக்க அயோத்திதாசரியம் பயன்படுகின்றது. தமிழ்பவுத்தம் சார்ந்த மொழியியலை விவரிப்பதற்கும் நவீன மொழியியல் சிந்தனைகளை வளப்படுத்த மொழி - சிந்தனை - வரலாறு என்ற காரணிகளை அயோத்திதாசரின் மொழியியல் சார்ந்து புரிந்து கொள்ளவும் அயோத்திதாசரியம் பயன்படுகின்றது.

## References

Aloysius, G, (2022) Religion as Emancipatory Identity: A Buddhist movement among the Tamils under Colonialism. New Age International, New Delhi.

Barthes, Roland, (1981) Introduction to the Structural Analysis of the Narrative, Centre for Contemporary Cultural Studies, University of Birmingham.

Dharmaraj, T. (2016) Naan enn Dalityum alla? Killaku Pathippagam, Chennai, India.

Dharmaraj, T. (2019) Iyotheethasar Paarppanar muthal paravarai varai, Killaku Pathippagam, Chennai, India.

Foucault, M. (1966) The Order of Things, An Archaeology of the Human Science, Routledge, London and Newyork.

Foucault, M. (1979) my body, this paper, this fire, tr. Geoff Bennington, oxford literary review.

Gnanasekaran, T. (2006) Pallu ilakkiyam maru vasippu, International institute of tamil Stuides, Chennai, India.

Iyotheethasar, (1999a), Indirar desa sarithiram, Dalit sahitya akademi, New Delhi, India.

Iyotheethasar, (1999b) Iyotheethasar sinthanaikal Vol.I, Folklore Resources and Research Center, St. Xavier's College, Tirunelveli, India.

Iyotheethasar, (1999c) Iyotheethasar sinthanaikal, Vol.II, Folklore Resources and Research Center, St. Xavier's College, Tirunelveli, India.

Marudanayagam, P. (2006) Oru Purva bhuvaththanin satchiyam Iyotheethasarin solladalkal, Kallaththi Pathippagam, Tirunelveli, India.

Prem, (2019) Iyotheethasar thodangivaitha araporattam, Ethir Veeliyeedu, Pollachu, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License